# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
மாசி 17
ரபி. அவ். 20
புதன் (1-3-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 76
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35


# 'இடது'களுக்கு ஏன் இந்தக்கதி?

அன்பு நண்பா

1970 முதல் 1977 வரை ஏழாண்டு காலம் நடைபெற்ற 'ஏழரை' ஆட்சியின் போது மூன்றில் இரண்டு பங்கு காலம் அந்த ஆட்சியில் பெரும் பங்கேற்று, அமைச்சர் பதவிகள் வகித்து—தரப்படுத்தல் முறைக்கு உடந்தையாயிருந்து, தமிழ் மாணவர்களின் உயர் கல்வியைத் தரைப்படுத்தி, தமிழ் சமுதாயத்தை உரிமை பறிக்கப்பட்ட அடிமை சமுதாயமாக ஆக்கிவைத்திருக்கும் இன்றைய அரசியல் சட்டத்தை உருவாக்குவதல் ஆணவ முனைப்புடன் பூரண பங்கேற்று, உரிமை கோரிய தமிழ் இளைஞர்களையெல்லாம் விசாரணையின்றி பல ஆண்டு காலமாக சிறைக்கோட்டத்துக்குள் தள்ளி, எண்ணரிய கொடுமை பல விளைவித்து, தமிழ் இனத்தை கண்ணீர்க்கடலில் ஏழாண்டுகாலம் மிதக்கவைத்திட்ட இடதுசாரித் தலைவர்கள்—உதைத்துத்தள்ளப்படும் வரை சிறிமா அம்மையாரின் சேலைத்தலைப்பில் தொங்கி தமிழ் சமுதாயத்துக்கு மோசமிழைத்தவர்கள் — இன்றைக்கு இடதுசாரி ஐக்கிய முன்னணியென்ற புதிய லேபலுடன் தங்கள் பழையசாயம்போன சரக்கை வைத்து யாழ் முற்றவெளியில் கடைவிரிக்க முயன்ற சமயம்—சென்ற (பெப்ரவரி 22ம் திகதி) புதன் கிழமை தமிழ் பொதுமக்களால் விரட்டியடிக்கப்பட்ட நிகழ்ச்சியை ஏடுகளிலே படித்திருப்பாய்!

பழம் பெரும் இடதுசாரித் தலைவர்களான டாக்டர் என். எம். பெரேரா, பீட்டர் கெனமன், ரி. பி. சுபசிங்கா, ஆகியோர் கலந்து கொண்ட இடதுசாரி ஐக்கிய முன்னணியின் முதலாவது பொதுக் கூட்டமே யாழ்ப்பாணத்தில் குழம்பிப் போயிருக்கிறது — பொதுமக்களின் ஆக்ரோஷமான எதிர்ப்பின் காரணமாக!

கல்வீச்சு,
செருப்பு வீச்சு,
மண்ணுங்கட்டி வீச்சு!

இத்தனையும் கூட்டமேடையை நோக்கி வீசப்பட்டதாக செய்தி ஏடுகள் தெரிவிக்கின்றன.

ஜனநாயக உரிமைகள் நின்றுநிலைத்திட வேண்டும்—அரசியல் நாகரிகம் பாதுகாக்கப்பட வேண்டும்—என்பதிலே அக்கறையும் ஆர்வமும் உள்ள யாரும் இந்த நிகழ்ச்சியையிட்டு மகிழ்ச்சியடைய முடியாது! ஆயினும் அடக்கி வைக்கப்பட்டிருந்த பொது மக்களின் உள்ளக்கொதிப்பு—கொந்தளிப்பு—பீறிட்டெழும் போது, வேதனை தரக்கூடிய இத்தகைய சம்பவங்கள் நடைபெற்று விடுகின்றன; இங்கு மட்டுமல்ல, வெளி நாடுகளிலும் இவ்வாறு நடந்து விடுவதை கவனித்திருக்கிறோம்!

அற்ப பதவி சுகத்திற்காக கொள்கை பிறழ்ந்து குத்துக்கரணமடிக்கும் சந்தர்ப்பவாத அரசியல் தலைவர்களை — அவர்கள் எவ்வளவுதான் பெரியவர்களாக இருந்தாலும் சரி — தமிழ்ப் பொதுமக்கள் மறக்கவோ மன்னிக்கவோ மாட்டார்கள் என்பதையே பெப்ரவரி 22ல் நடைபெற்ற முற்றவெளிசம்பவம் எடுத்துக்காட்டியிருக்கிறது.

ஏழாண்டுகால அம்மையார் ஆட்சியில் கொள்கைகளை கோட்டை விட்டு பதவிக்காக அட்டைபோல் ஒட்டியிருந்து கொண்டு—தமிழ் சமுதாயத்தின் உரிமைகளையெல்லாம் அபகரிப்பதற்கும், தமிழ் மக்கள் மீது கொடிய அடக்கு முறையை ஏவிவிடுவதற்கும் தாமும் பங்காளிகளாக இருந்து—தமிழினத்தை கொல்லும் சட்டமான கொல்வின் அரசியல் சட்டத்தை உருவாக்கி, ஆணவமொழிகளைச் சிந்தி ஏகாதிபத்திய ஆட்சி நடத்திய இந்த இடதுசாரித தலைவர்கள், அன்று அமைச்சர்களாக சி. ஐ. டியும் ஆயுதப் பொலீஸ்படையும் புடைசூழ, ரதகஜதுரகபதாதியுடன் அதிகார வெறிகொண்டோராய் பவனிவந்திட்டபோது தமது உள்ளக் குமுறலை வெளிப்படுத்திட வாய்ப்

## அரசியல் மேடை

பின்றி ஊமைகளாகி மனம் புழுங்கி அடங்கிக் கிடந்த தமிழ் பொதுமக்கள் — அந்த உள்ளக் குமுறலை, கொந்தளிப்பையெல்லாம் 'அதிகாரமிழந்த நிலையில் இப்போது வந்திருந்த அதே இடதுசாரித் தலைவர்கள் மீது ஒருசேரக் கொட்டியிருக்கிறார்கள்; அவ்வளவு தான்!

இது வேதனைமிக்க சம்பவம்தான்; வெறுக்கத் தக்க நிகழ்ச்சிதான்; ஆனாலும், இதற்கு காரணமாக அமைந்தது இதே தலைவர்களின் கடந்தகால கொள்கைக் குத்துக்கரணங்களும், கொடுங்கோன்மையும்தான் என்பதையும் நாம் மறப்பதற்கில்லை!

இன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் — அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது — 1975ம் ஆண்டு யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த சமயத்தில் —இதே முற்றவெளியில் நாவடக்கமின்றி 'பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து பவனிவருவேன்' என்று சூழுரைத்தபோதும், தமிழ்ப் பொதுமக்கள் கொந்தளித்து எழுந்து கூட்டமே நடத்தவிடாது அவரைத் தடுத்ததை நாடறியும்!

ஆக வலதுசாரிகளானாலும் சரி—இடதுசாரிகளானாலும்சரி—வேறு எந்த 'சாரி' ஆனாலும்சரி —கொள்கை பிறழ்ந்தோரை தமிழினத்துக்கு குழிதோண்டுவோரை—தமிழ் சமுதாய மக்கள் மன்னிக்கவோ மறக்கவோமாட்டார்கள்; காலம்வரும்வரை காத்திருந்து தங்கள் கடுமையான எதிர்ப்பை அவர்களுக்கு உணர்த்தியே தீருவார்கள் என்பதையே முற்றவெளி சம்பவம் எடுத்துக்கூறுகிறது!

வந்திருந்த 'இடது'களும் என்ன கூறியிருக்கிறார்கள்?

தமிழ்மக்கள் ஒரு தனித் தேசிய இனம் என்பதையும் 'அவர்களுக்கு பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை உண்டென்பதையும்' மார்க்சிஸ்டுகள் என்போர் பகிரங்கமாக ஏற்று அதை பிரகடனப்படுத்த வேண்டும் என்று உண்மையான — கலக்கம் தெளிந்த தமிழ் மார்க்சிஸ்டுகள் மிகவும் தீவிரமாக வலியுறுத்திவருகின்றனர்; ஆனால் அது பற்றி இந்தக் 'கிழட்டு' மார்க்சிஸ்டுகள் வந்த இடத்தில் வாய்திறக்கவேயில்லை!

மூன்றரை லட்சம் வாக்குகளைப்பெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணி பதினேழு இடங்களைப்பெற்று பிரதான எதிர்க்கட்சியாக விளங்கும்போது ஐந்து இலட்சம் வாக்குகளைப் பெற்ற இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கு ஒரு இடமும் கிடைக்கவில்லையே என்று பீட்டர் கெனமனார் பிரலாபித்திருக்கிறார். ஆம், தமிழர் விடுதலைக் கூட்டணி 17 ஸ்தானங்களுடன் எதிர்க்கட்சித் தலைமையிலிருப்பது கெனமனுக்கே "என்னமோ"போல இருக்கிறது."சோசலிசம்" பேசும் பெருந்தலைவராலேயே தமிழர் ஒருவர் எதிர்க்கட்சி முதல்வராக இருப்பதைத் தாங்கிக்கொள்ளமுடியவில்லைப்போலும்!

இவர்கள் இதே போக்கில் சென்றார்களாயின், எதிர்காலத்தில் இவர்கள் ஐந்து வாக்குகளையாவது பெறுவது கஷ்டமாகவேயிருக்கப்போகிறது.

அதுமட்டுமல்ல—பழுத்த முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக்கட்சியுடன், ஏழாண்டு காலமாக கட்டிப்புரண்டு கைகோத்து ஆட்சி நடத்திய கெனமனார், தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பார்த்து "முதலாளித்துவக்கட்சி" என்று வர்ணித்திருக்கிறார்! என்னே வேடிக்கை!

"செக்குமாடுகள்"போல தவறான ஒரு வட்டத்துக்குள்ளேயே மீண்டும் மீண்டும் சுற்றி வருகிறார்கள் இந்த 'இடது'கள். இவர்கள் தமிழ் சமுதாயத்தின் அபிலாஷைகளை ஈடு செய்யும் விதத்தில் தமது சிந்தனையில் புதிய மாற்றத்தை கொண்டுவராதவரை, தமிழ் ஈழத்தில் இவர்களுக்கு இடமே கிடையாதென்பதை யாரோ மறுத்திடவல்லார்?

அன்புத் தோழன்

கோவை-மகேசன்

# பணிஸ் சில்வாவை தெரியுமா எனக் கேட்டு பைந்தமிழன் தர்மரத்தினம்மீது மிலேச்சத்தனம்!

## ஏழு மணித்தியாலங்கள் கயிற்றில் தொங்கவிட்டு சித்திரவதை!

### பொலீஸ் கொடுமை குறித்து பேரவையில் செல்லத்தம்பு வெளியிட்ட திடுக்கிடும் தகவல்

"பணிஸ்சில்வா என்பவரை தெரியுமா" என்று கேட்டு யோகபுரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தர்மரத்தினம் என்பவரை மன்னார் பொலிசார் மிலேச்சத்தனமாக தாக்கியுள்ளனர். அந்தரத்தில் ஏழு மணித்தியாலங்கள் [illegible] அவரை கட்டித்தொங்க விட்டு, துன்புறுத்தியிருக்கின்றனர். பொலீஸ் துன்புறுத்தல் காரணமாக இப்போது கைகால்கள் இயங்காத நிலையில் திரு. தர்மரத்தினம் யாழ் ஆஸ்பத்திரியில் இருந்து வருகிறார்.

"தார்மீகம்" பேசும் ஜே' ஆர். ஆட்சியில் நடந்ததாக கூறப்படும் இந்த மகா கொடுமை பற்றி 24-2-78ல் தேசிய அரசுப்பேரவையில்
—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] நாடகம் அலசல்

## அடிமைப் புத்தி

கந்தன்: முத்தண்ண, எங்கட தமிழ் ஆக்கள் உண்மையிலேயே தமிழ் மொழியை நேசிக்கினமோ எண்டு எனக்குச்சந்தேகம்தான் அண்ண.

முத்து ஏன்?

கந்தன்: இந்த கலம்பகத்தில யாழ்ப்பாணத்தாக்களிட கடைகள், யாழ்ப்பாணம் ரவுணில வச்சு எரிச்சாங்கள்—ஏன் எரிச்சாங்கள்? தமிழன்கள் என்ற காரணத்தாலதானே?

முத்து! ஓம்.

கந்தன்: நான் நினைக்கிறன் கடை எரிச்சதோட அவையள் தாங்கள் தமிழர் எண்டு சொல்லப்பயப்பிடுனம்போல.

முத்து! ஏன்?

கந்தன்: பின்ன என்ன அண்ண, யாழ்ப்பாணத்தார் எல்லாரும் தமிழீழம், தமிழீழம், நாங்கள்தான் கிழக்கு மாகாணத்தைவிட தமிழீழக் கொள்கைக்கு பூரண ஆதரவைக் கொடுத்தனுங்கள் எங்களுக்கு எல்லாம் தமிழில செய்யவேண்டும். தமிழுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்டெல்லாம் சொல்லுறவையள்—

முத்து! நீ விஷயத்துக்கு வாவன் ஏன் நீட்டி அளக்கிறாய்.

கந்தன்; உந்தக் கலம்பகத்தில் பஸ்டாண்டில எரிச்ச கடைகளை திரும்பக் கட்டிக் குடுத்திருக்கினமில்லே. அதில ஒண்டிரண்டு கடைகளைத்தவிர மற்ற எல்லாக் கடைகளிலையும் பெயர்பலகைகள் இங்கிலிசில பெரிய எழுத்திலையும் கீழுக்கு தமிழை சின்ன எழுத்திலையும் எழுதிவைச்சிருக்கினம் பார்! உப்பிடிப்பட்டவையள்தான் தமிழீழப்போராட்டத்தில முன்னுக்கு நிற்பினம் எண்டு சொல்லுறியே.

முத்து: அதுக்கு என்ன செய்யிறது அது அவரரவர் விருப்பம்.

கந்தன்: அண்ணே நீயும் எங்கட சில அரசியல்வாதிகள் மாதிரி சமாளிச்சுக் கதைக்காத; எங்கடை ஆக்களுக்கு இன்னும் அடிமைப் புத்தி போகல்ல தாங்கள் தமிழில் பெரிசாய் பெயர்பலகை எழுதினுல் தமிழ் பற்றுள்ளவங்கள் எண்டு சிங்களவங்கள் கண்டுபிடிச்சிடுவானுகள் எண்டு பயம்போல, இத்தினைக்கும் வெக்கக்கேடு என்ன எண்டால் அந்தச் சுற்றுடலில இருக்கிற ஒரே ஒரு சிங்களக்கடை பெயர்பலகையில சிங்களத்தில பெரிசாய் எழுதி தமிழிலையும் இங்கிலிசிலையும், கீழுக்கு சின்னனுய் எழுதிப் போட்டிருக்கிறுங்கள். அவையளுக்கு இருக்கிறதுணிவும், இனப்பற்றும் எங்கட ஆக்களுக்கு இல்லைத்தானே இதுக்கு என்ன செய்ய வேணும் சொல்லுபாப்பம்.

முத்து! என்ன செய்ய வேணும்,; தாங்களாக அவையள் உணர்ந்து திருந்த வேணும். அப்பையும் திருந்தாட்டி ஏதோ பெரிய தியாகம், தொண்டு, போராட்டம் எல்லாம் செய்யப் போறம் எண்டு சொல்லுற எங்கட தமிழ் இளைஞர் இயக்கங்கள், மகளிர் இயக்கங்கள் உதுபோல சின்ன விஷயங்களில எங்கட ஆக்களுக்கு தமிழ் உணர்வை வளர்க்க முன்னுக்கு வரவேணும்.

# சேர். பொன். இராமநாதனின் வரலாற்றுக் களஞ்சியம்!

## அறிஞர் வைத்திலிங்கத்தின் இரண்டாவது தொகுதி வெளிவருகிறது!

சேர் பொன். இராமநாதனுடைய வரலாறு தனி மனிதன் வரலாறு அல்ல, ஈழத்து அரசியல் வானில் அரை நூன்றுண்டிற்கு மேல் தனித்து அரசோச்சிய ஒரு தமிழ்ப் பெரு மகனுடைய வரலாறுகும். இத்தகைய ஒரு மாமனிதர் இம்மாநிலத்தில் தோன்றியதை ஒட்டி ஒவ்வொரு மானிடனும் பெருமைப்பட வேண்டும். இத்தகைய ஒரு பெரு மனிதன் எம்மினத்திற் தோன்றியதையிட்டு தமிழராகிய நாம் இரட்டிப்பு மகிழ்ச்சியும் பெருமித உணர்ச்சியும் கொள்கிறோம்,

இத்தகைய சிறப்பியல்புகளில் உறைவிடமாக விளங்கும் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை தனக்கேயுரிய தனி ஆங்கிலச் சொல்லாட்சியுடன் வரையக்கூடிய ஒருவர் இருப்பாராயின் அவர்தான் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் மூன்னுள்முதவ்வர் திரு. மு. வைத்திலிங்கம் அவர்களாவர். சேர். பொன். இராமநாதனுடைய முன்னோர், அவரின் தோற்றம், அவர் 1910 ஆம்ஆண்டு வரையான காலப் பகுதியில் ஆற்றிய பல்துறை வாழ்க்கைப் பணி போன்றவற்றை ஏறக்குறைய அறுநூற்றைம்பது பக்கங்களில் வரைந்து 1971ல் மிகச் சிறப்பான முறையில் வெளியிட்டவர் திரு. வைத்திலிங்கம் அவர்கள். இந்நூலுக்கு உலகின் பலபாகங்களிலுமிருந்து வெளிவந்த பாராட்டுக்கள் நூலின் பாங்கினைப் பாருக்குப் பறைசாற்றப் போதிய சான்ருயமைகின்றது.

மீண்டும் ஏறக்குறைய ஏழாண்டுகள் இடைவெளிக்குப் பின் "இராமநாதன் அறங்காவற் குழுவின்" நிதி உதவியும் பெற்று சேர். பொன். இராமநாதனின் இரண்டாவது இறுதித் தொகுதி ஏறக்குறைய எழுநூற்றி எழுபத்தைந்து பக்கங்களுடன் இவரால் வெளியிடப்பட இருக்கின்றது. 1911ஆம் ஆண்டு தொடக்கம் அவர் மறையும் வரையிலான 1930 ஆம் ஆண்டு வரைக்கான காலப் பிரிவை உள்ளடக்கி வெளிவரும் இந்நூலில் இலங்கையின் கல்வி கற்றோரின் பேராளராகத் தெரிவு செய்யப்பட்டது தொட்டு 1915 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது அவராற்றிய மாபெரும் பணியை இனிது விளக்கி இலங்கையின் விடுதலைப் போராட்டத்தில்—அதன் படிப்படியானவளர்ச்சியில்—அவராற்றிய செயற்கரிய பணியைப் பற்றியும், இலங்கைப் பல்கலைக்கழகம் எங்கு அமைய வேண்டும் என்று அவர் எடுத்துரைத்த கருத்துக்களையும் உள்ளடக்கியும் தன் வாழ்வின் இறுதிக் காலத்தில்தம் இனத்திற்கு ஏற்படக்கூடிய பெரும்பேராபத்துக்களைமுன் கூட்டியேஅரசியல் உணர்வோடு" டொனமூர் எனில் இனிமேல் தமிழர் இல்லையென்று" முழங்கி தன் இறுதி மூச்சு உள்ள வரை தன் தள்ளாடும் வயதினைக்கூடப் பொருட்படுத்தாது நெஞ்சம் நெக்குருக கண்களில் நீர் பெருக சேர். பொன். இராமநாதனுடைய வரலாற்றினை இத் தொகுதியில் திரு. வைத்திலிங்கம் அவர்கள் வரைந்துள்ளார்கள். இந் நூலில் இராமநாதன் அவர்களின் அருமைத்தம்பி அருணுசலம் அவர்களைப்பற்றியும் ஒரு தனி அத்தியாயம் வரைந்துள்ளது நூலுக்கு மேலும் மெருகூட்டுகிறது.

வரலாற்று உணர்வு, உரிமைக்கு வித்து என்று சொல்லப்படுகின்றது. இந்த வரலாற்றுஉணர்வினை எம்மினம் போதிய அளவு பெருததும் இன்று எம் இழி நிலைக்கு ஒரு காரணமாக அமைகின்றது. தமிழன் வாழ்வு மீண்டும் தலையெடுக்கவும் உலகின் கவனத்தைத் தமிழன்பால் ஈர்க்கும் முறையிலும் சேர். இராமநாதனின் வரலாறினை தனிமனிதன்வரலாறு என்ற எல்லையினையும் தாண்டி ஒரு பெருமைமிக்கதேசிய இனத்தின் வரலாருக, இன்று வாழும் எம் நிலையினையும் நினைவிற்கொண்டு வரையப்பட்டுள்ள இந் நூல் காலத்தின் தேவையை நிறைவு செய்வதோடு காலத்தால் சாகாது ஞாலத்தில் நிலைத்து வரலாற்றுக் களஞ்சியமாகவும் இது மிளிர்கின்றது. குறிப்பாக வரலாற்று உணர்வினை முற்றும் இழந்தநிலையில் எல்லை மீறி உணர்ச்சி வயப்படும் தமிழ் இளைஞர்களுக்கு ஓர் அறிவின் திறவுகோலாகவும், தம் வசதிக்காகத் தம்பழைய வரலாற்றை மறக்க முயலும் நம் முதியோர்க்கு சாட்டையடி கொடுக்கும் நூலாகவும் இந்நூல் ஒளி விடுகின்றது.

இந்நூலைப் பயில்கின்றபோது இந்நூலாசிரியரின் பரந்து விரிந்த ஆழமான நுண்ணறிவுத் திறன் எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. அவர் சொல்லும் பொருள் எம்மை சிந்திக்க வைப்பதோடு அவர் சொல்லும் முறை நற்சுவை விருந்தாகவும் அமைகிறது. உண்மையில் ஆங்கிலம் அவருக்கு அடிபணிந்துசெயலாற்றுகின்றது; இத்தகைய ஒரு நூல் இதுவரை வெளிவந்ததுமில்லை; வெளிவரப் போகின்றதா என்பதும் பெரும் கேள்வியேயாகும்.

இந் நூலின் வெளியீட்டு விழா வெகு விரைவில் மிகச் சிறப்பாக யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது. ஈழத்தின் பல்துறை அறிஞர்கள் இவ்விழாவிற் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிருர்கள்; இவ்விழா தமிழன் வரலாற்றில் ஒருதிருப்புமுனையாக அமையப்போகின்றது என்பது எமது நம்பிக்கை.

**ஈழவேந்தன்**
(இராமநாதன் நூல்வெளியீட்டு குழுவின் சார்பில்)

# கலைஞர் வேல் ஆனந்தனின் "பஸ்மாசுரன்-77"

சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளை, மக்களின் அவலங்களை, அவர்களது பிரச்சினைகளை தத்ரூபமாக எடுத்துக்காட்டுவதற்கு கலையை ஒரு சாதனமாகப் பயன்படுத்தி அதிலேவெற்றியீட்டியவர்கள் தமிழக திராவிட முன்னேற்றக்கழகத்தினர். அறிஞர் அண்ணு அவர்களும் திமுக தலைவர்களும் கலை முலம் தங்கள் கருத்துக்களை மக்களிடையே பரப்பினுர்கள்.

அதேவழியில்கடந்த 1977 ஆவணியில் தமிழன் வடித்த கண்ணீரை- சிங்களக் கொடுங்கோ!ன்மையின் காரணமாக அவன்பட்ட அவதிகளை -பஸ்மாசுரன் அன்று வானுலகில் நிகழ்த்தியதாக கூறப்படும் கொடுமைகளுடன் இணைத்துக்காட்டி அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும். புதியநாட்டிய நாடகமான "பஸ்மாசுரன் 77" யாழ் கலையரங்கில்11-2-77ல் மேடையேற்றப்பட்டது.

அடலேறு மு. ஆலாலசுந்தரம் தயாரித்த இந்தப் புதிய நாட்டிய நாடகத்தை கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினர் மேடையேற்றினர். (சிங்கள) பஸ்மாசுரன் கொடுமைகள் பூலோகத்தில் எப்படியிருந்தது என்பதை நாடகத்தின் முற்பகுதியும், தேவலோகத்தில் எப்படியிருந்தது என்பதை நாடகத்தின் பிற்பகுதியும் சித்தரிப்பதாக இந்த நாட்டிய நாடகம் அமைக்கப்பட்டிருந்தது.

தனது படைப்பில்எல்லோரும்சமத்துவமாக வாழ்கிருர்கள் என்று எண்ணியிருந்த திருமாலின் கண்களுக்கு, அப்படி வாழவில்லை; இலங்கையில் தமிழர்கள் கொடுமைகளுக்கும் பாரபட்சங்களுக்கும் உள்ளாக்கப்படுகிருர்கள் என்பதை சுட்டிக் காட்டுவது போன்ற காட்சியுடன் முதல்பகுதி தொடங்குகிறது.

ஆண்டபரம்பரை அகதிகள் முகாமில் பட்ட அவல வேதனை; அங்கு அவர்கள் சிந்தனையில் ஏற்பட்ட தெளிவு, அதன்பின்அவர்கள் மேற்கொண்ட சூளுரை ஆகியன தொடர்ந்து இடம் பெறுகின்றன. ஒரு இளம் தமிழ்க்குடும்பம் இனக்கலவரத்தின்போதுபட்டபயங்கர கொடுமைகள் உணர்வு பூர்வமாக சித்திரிக்கப்படுகின்றன. கதகளி அமைப்பில் இடம்பெற்ற இந் நாட்டிய நாடகத்தில், தமிழ் இளம் பெண்ணுக பங்கு கொண்டவரின் முக பாவமும், விறுவிறுப்பான நடிப்பும் பார்ப்போர் உள்ளங்களில் உணர்ச்சியலைகளை தட்டிவிடுகின்றன.

நாட்டிய நாடகத்தின் பிற்பகுதியில் தேவலோக பஸ்மாசுரனுக தோன்றும் கலைஞர் வேல் ஆனந்தன் அவருக்கே உரிய தனிப் பாணியில் உக்கிரமாக உணர்வு அலைகளை முகபாவத்திலே அலை புரள ஆடுகின்ற காட்சி நம்மை அதிலேயே ஒன்றச் செய்து விடுகிறது.

இந்நாட்டிய நாடகம் இன்றைய அரசியல் சூழ்நிலையில் நாட்டுக்குத் தேவையான ஒரு புரட்சிதான். வானுலக பஸ்மாசுரன் இறுதியில் அழித்தொழிக்கப்பட்டு, வானோர் விடுதலை பெற்றது போல பூவுலக பஸ்மாசுரன் அழிக்கப்பட்டு, தமிழ்சமுதாயம் விடுதலை பெறுவதற்கு 'பஸ்மாசுரன் 77'' போன்ற நாட்டிய நாடகங்கள் பக்கதுணையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

—கோவை

# புதியகடை திறப்பு விழா

தமிழ் இளைஞர்பேரவை நல்லூர் கிளை உறுப்பினரும் சிறைசென்ற தொண்டரும் கூட்டணி ஆதரவாளருமான திரு. பொன். மதிமுகராசா, யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தியில் "திருமுருகன் ஸ்ரோஸ்'' என்ற பெயரில் புதிய கடையொன்றைஆரம்பித்துள்ளார். இக் கடைக்கு அண்மையில் நல்லூர் பா. உ. திரு. சிவசிதம்பரம் குத்து விளக்கேற்றிவைக்க, வட்டுக் கோட்டை பா. உ. திரு. தா. சிவசிதம்பரம் திறந்துவைத்தார். யாழ்ப்பாணம், மானிப்பாய் காவலூர்பா.உக்களும், மில்க்வைற் அதிபர் கனகராசா, எஸ்.ரி. ஆர். ஆகியோரும் திறப்புவிழாவில் கலந்துகொண்டு வாழ்த்தினர். கூட்டணியின் ஏனைய பா. உக்களும், எதிர்க்கட்சித் தலைவரும், கூட்டணிப் பிரமுகர்களும் வாழ்த்து தந்தி அனுப்பியிருந்தனர்.

# த. வி. கூ. அனலைதீவுக் கிளை

18-2-78ல் அனலைதீவில், ஊர்காவற்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அனலைதீவுக் கிளை நிறுவப்பட்டது. இக்கிளைக்கு பின் வருவோர் உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்:- ஐ. வைத்தியலிங்கம், உப-தலைவர்:- மு. வே. மயில்வாகனம், செயலாளர்:- சு. தயாபரராசா, உப-செயலாளர்:- செ. சிவரெத்தினம், பொருளாளர்:- இ. சிவானந்தன், நிர்வாக சபை உறுப்பினர்கள்:- சி. தர்மகுலநாதன் ஐ.செல்லன், வை. தணிகாசலம், சு. தியாகராசா.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கில் திரு. கா. பொ. இரத்தினம் ந. உ. அவர்களும் அதைத் தொடர்ந்து திருவாளர்கள் க. இளையதம்பி அதிபர், சி. காராளபிள்ளை, ஆசிரியர், ஐ. வைத்திலிங்கம், த. விநாயகமூர்த்தி, சு. தியாகராசா, சு. தயாபரராசா மற்றும் உறுப்பினர்களும் கருத்துரை வழங்கினர்,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஒருவர் மொழியை மற்றவர் படிப்பதால்

# இன ஐக்கியம் வளரமுடியுமா?

### காசி ஆனந்தன் நிதிக்கு வாரி வழங்குவீர்!

அன்புடையீர்,

கவிஞர் காசி ஆனந்தன் ஒரு சாதாரண கவிஞன் அல்ல, மாருக ஈழம் வாழ் தமிழினத்தின் இன்னல் போக்கவும் விடுதலை பெற்று நிற்கவும் இறைவனல் எமக்கு வழங்கப்பட்ட அருட்கொடையின் வடிவமே நம் காசி ஆனந்தனுகும். பாரதத்திற்கு ஒரு பாரதியும், பாகிஸ்த்தானுக்கு ஒரு இக்பாலும், திராவிடத்திற்கு ஒரு பாரதிதாசனும் கிடைத்தது போல் தமிழீழம் மலரத் தன் உணர்ச்சி பொங்கும் கவிதையால் விடுதலைப்பாதையில் எம்மை அழைத்துச் செல்லும், ஓர் உண்மைக் கவிஞனுக இவர் விளங்குகிருர். பட்டினி கிடந்து பாழ்பட நேர்ந்தாலும், அடி உதை பெற்று அல்லல் பல உற்றுலும் சிறையில் வைத்துச்சித்திரவதைசெய்யப்பட்டாலும் கொண்ட கொள்கைக்காக வாழ்ந்தேதீருவேன் என்ற பொருள் படப்பாடியதிற்கு அமைய தமிழர் விடுதலை இயக்கத்திலும் ஏறக்குறைய கால் நூற்றுண்டாக அவர் பட்ட தொல்லைகள் பெற்ற துயர் தோய்ந்த அனுபவங்கள் சொல்லில் அடங்கா. 'வெலிக்கடைச் சிறை எனக்கு வெண்ணிலா அறை" எனப்பாடி நான்கு தடவைகளுக்கு மேலாக சிறையில் தமிழுக்காக அவர் தவம் செய்ததை எந்த நன்றியறிவுள்ள தமிழனும் மறக்க முடியாது. அவர் உண்மையில் சொல்லொத்த செயலாற்றிய செம்மலாவார்.

அரச திணைக்களம் ஒன்றில் ஆயிரம் ரூபாய்களுக்கு மேலாக மாதச்சம்பளம் பெற்று தானுண்டு தன் குடும்பம் உண்டு எனக்கூறி கற்பனை உலகிலிருந்துகொண்டு இயற்கை அழகு பற்றியும் இள நங்கையர் அழகு பற்றியும் கவிதை படித்திருக்கலாம், காவியம் படைத்திருக்கலாம் ஆனல் அவரோ அதைச் செய்யவில்லை. நாயினும் கீழார் நம் தமிழர் நலிவதைக்கண்டு ஐயோ என அலறிய அவர், ஓயுதல் இன்றி அவர் நலம் பேணி உழைப்பதே எம் வாழ்வின் குறிக்கோள் என முழங்கி "என் பத்து விரல்களையே நம்பி என் பதவியைத் துறக்கிறேன்" எனக்கூறி எம் குடியைக் கெடுக்க வந்த கொல்வினின் குடியரசுச் சட்டத்தை எதிர்த்து தன் பதவியைத் துச்சமென மதித்து தூக்கியெறிந்து விடுதலைக் குயிலென வெளிவந்து எம் உள்ளுணர்வுகளைத் தட்டி எழுப்பும் தகைசான்ற கவிஞனுக விளங்குகிருர்.

பாரதி வாழ்ந்த போதும் அவன் பட்டினியால் வாடி வதங்கி மடியவிட்ட தமிழ் இனம்; அவன் செத்தபின்பு அவன் சிவலோகம் சென்ற செம்மல் என்றும் அவனுக்குச் சிலை எழுப்பி மணிமண்டபம் எழுப்பி அவன் மாண்பினைப்பறை சாற்றுவோம் என்றும் அவன் மறைந்த பின்பு புகழ்பாடியதுபோல் நாமும் கவிஞர் காசி ஆனந்தன் வாழும்போது அவருக்குரிய சிறப்பினை வழங்கிப் போற்ருது விடின் மன்னிக்க முடியாத குற்றம் செய்தவர்கள் ஆவோம்.

இக்கவிஞனின் வாழ்வு வளம்பெற எம்மால் இயன்றதைச் செய்யும் நோக்குடன் ஒரு பதிப்பகம் ஒன்றை அவருக்கு உருவாக்கிக் கொடுக்க நாம் திட்டமிட்டுள்ளோம். இதனை ஏற்றமுற நிறைவேற்ற எமக்கு ஏற்படக்கூடிய செலவுகள் 60,000 ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது இதுவரை அவரின் பெயரில் எமது கைவசம் உள்ள தொகை ஏறக்குறைய ரூ. 15,000. ஆகவே இன்னும் 45,000ரூபா சேர்க்கப்பட வேண்டும். இன்று எம் தமிழ் ஈழத்தில் எமக்குள்ள தொகுதிகள் 22 ஆகும். ஒரு தொகுதி வாழ் மக்கள் ரூ 2,000 என்ற அடிப்படையில் பணம் சேர்க்கப்படுவதோடு, இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் மிகுதித் தொகை சேர்க்கப்படின் நாம் வேண்டிநிற்கும் தொகையைப் பெற முடியும் என்பது எமது நம்பிக்கை.

சிறு துளி பெரு வெள்ளம் என்ற கூற்றுக்கமைய ஒவ்வொரு செந்தமிழ் மகனும் தம் கடமையைச் செய்ய முற்படின் எம் பணி இனிது நிறைவேறும். திராவிடத்தின் எழுச்சி பாடிய பாரதி தாசன் படுந்துயர் தாங்காது தனி மனிதனுக அறிஞர் அண்ணு சேர்த்து வழங்கிய தொகை செந்தமிழர் உள்ளத்தில் அவருக்கு நிலையான இடத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது என்பது நாடறிந்து உண்மையாகும். மிக்க நோய்வாய்ப்பட்ட நிலையிலும் மெலிந்த தன் உடலுடன் கூட தமிழ் ஈழம் காணத் துடிதுடித்து "தமிழன் கண்ட கனவை" நனவாக்க முயலும் நம் நல்ல வல்ல கவிஞனுக்கு எம் நன்றிக் கடன் செலுத்த முந்துவோமாக.

நிதி அனுப்பவேண்டிய முகவரி:
சி. கதிரவேற்பிள்ளை பா: உ.
68, குறுெசெட் ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்

மு. சிவசிதம்பரம், (தலைவர்)    சி. கதிரவேற்பிள்ளை, (பொருளாளர்)

வெ. யோகேஸ்வரன்,    பூ. கணேசலிங்கம்
(இணைச் செயலாளர்கள்)

---

இலங்கையில் இனஒற்றுமையை ஏற்படுத்த திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஒரு மருந்து கண்டுபிடித்துள்ளார்! அது தமிழ் மாணவர் சிங்களமும் சிங்கள மாணவர் தமிழும் கற்பது. வெளிப்படையில் நல்லது போல் தோன்றினும் உள்நோக்கில் அது ஒரு நஞ்சு என்பதை நாம் உணர்கிறேம். நாக பாம்பு படம்விரித்தாடும் அழகில் மயங்கி, அதைத் தூக்கி மடியில் கட்டிக்கொள்ளத் தமிழர் முழுமூடர் அல்லர்.

மொழியை மாறிக் கற்றுக் கொள்ளுதலே இன ஐக்கியத்துக்குள்ள உண்மையான— நன்மையான ஒரே வழியென்ருல், ஜெயவர்த்தன தமிழைக் கற்றுத்தான ஐக்கியம் பேசுகிருர். அல்லது தமிழ் தெரியாத ஜெயவர்த்தன ஐக்கியம் பேசுவது பொய்யாதல் வேண்டும்!

அண்ணன் தம்பி இருவரிடத்தில் ஒரு மாம்பழம் கிடைத்தது. அண்ணன் அதை முழுதாகத்தானே உண்டுவிட விரும்பினன்; தம்பி தனக்கு பங்கு கேட்டான். இருவருக்குமிடையில் சண்டை மூண்டது. சமாதானம் பிடிக்கவந்த நண்பர் ஒருவர் இளையவனைப் பார்த்து "தம்பி, நீ மாம்பழம் முழுவதையும் அண்ணனுக்கே கொடுத்துவிட்டு அவன் சொல்வதன்படியே கேட்டுக்கொண்டு ஐக்கியமாக இரு! அப்படிச் செய்தால் உங்களிருவருக்கும் சண்டை ஏற்படாது" என்று கூறினர். இந்த நண்பரின் நியாயம் போன்றதுதான் திரு. ஜெயவர்த்தன கூறும் 'ஐக்கிய மருந்தும்.'

ஐக்கியம் என்பது இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்ட சமத்துவமான முடிவிற்ருன் இருக்கிறதே ஒழிய, ஒரு பகுதியினர் எடுத்த முடிவை அடுத்தவரிடம் திணித்து அடக்கிவிடுவதில் இருக்கமுடியாது. சிங்கள ஜெயவர்த்தன எடுத்த தீர்மானத்தை தமிழர் முழுமனத்தோடு ஏற்ருல்தான் உண்மையான ஐக்கியம் வர முடியும்.

1958இலும் 1977 இலும் நிகழ்ந்த இனக்கலவரங்களில் தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தோர், தமிழர்தம் உடைமைகளைச் சூறையாடினேர், தமிழர்களைப் படுகொலை செய்தோர் — அத்தனை சிங்கள வெறியர்களும் தமிழ் தெரியாதவர்கள் என்று திரு. ஜெயவர்த்தன கருதுகிருரா? சேதமுற்ற தமிழர் அத்தனைபேரும் சிங்களம் தெரியாதவர்கள் என்று கூறமுடியுமா?

சிங்கள நாட்டிலே பிறந்து சிங்கள மொழியே பயின்று தமிழைச் சரியாகப் பேசத் தெரியாத அளவுக்கு சிங்களவரோடு சிங்களவராக வாழ்ந்து பல தலைமுறைகளை கழித்துவிட்ட தமிழர்களே சிங்கள வெறியர்களால் அகதிகளாக்கப்பட்டு தமிழீழம் வந்தடைந்த பரிதாப நிலையைப்பார்த்த எந்தத் தமிழனும் ஜெயவர்த்தனவின் நியாயத்தை ஏற்கமாட்டான்!

ஐக்கியத்துக்காகப் பரிந்து [illegible] மொழித்திட்டத்தைக் கொண்டுவந்த திரு. ஜெயவர்த்தன, ஏன் அரசியல் அமைப்பில் தமிழருக்கும் சம உரிமை வழங்கி ஐக்கியத்தை ஏற்படுத்தக் கூடாது? என்று கேட்க விழைகிறேம். ஐக்கியத்துக்காக எடுக்கும் முதல் முயற்சி அதுவாகவன்ரே இருத்தல் வேண்டும்;

ஆங்கிலத்தைக் கற்றதால் வெள்ளையனை எதிர்க்க தவறினேமில்லை. அடக்கி ஆளுவோர்தம் மொழி தெரிந்து விடுவதால் ஓரினத்தின் சுதந்திரதாகம் அடங்கிவிடாது. ஆளும் கொடிய சிங்கள அரசில் இருந்து விடுபடத் துடிக்கும் தமிழீழம் சிங்கள மொழியைக் கற்றுக்

**வீ. பரந்தாமன்**

கொள்வதால் அமைதி பெற்றுவிடாது; ஐக்கிய உணர்வும் பெற்றுக்கொள்ளாது.

1956ல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வந்த பின்னர்தான் இந்நாட்டின் ஐக்கியம் குலைந்தது என்பதை யாவரும் அறிவர்; அப்படியாஞல் ஐக்கியம் குலைவதற்குக் காரணமாயிருந்த தனிச் சிங்களச் சட்டத்தை நீக்கிவிட ஜெயவர்த்தன முன் வருவாரா?

சம அந்தஸ்து—சமஷ்டி— பிரதேச சுயாட்சி என்ற ஒற்றுமை அமைப்புமுறையைக் கேட்டுக்கொண்டிருந்த காலத்திற்ருன் அதனை ஏற்றுக்கொள்ளாத சிங்கள இனம், தமிழனை உதைத்தது. இரண்டாந்தர நிலைக்குத் தள்ளியது. இதன்பின்னர் எப்படி ஒற்றுமை நிலைக்கும்? இந்தச் சிங்கள இனத்துடன சமாதானம் பேசுவது? இந்தச் சிங்கள இனமா தமிழினத்தை அணைத்து ஐக்கியத்தைப் பேணும்? எல்லாமுயற்சியும் பயனற்ற போதுதான் தமிழினம் தனியாட்சிகோருகிறது.

சிங்களவன், தமிழன் சிங்களத்தைப் பேசுவதைப் பார்த்துத்தான் ஐக்கியப்படுவான் என்ருல், அங்கும் சிங்கள வெறியிருப்பது புரியவில்லையா? எவன் எம்மொழியினனயினும், மனிதன் என்ற வகையில் ஐக்கியத்தைப் பேணுவதல்லவா கலப்படம் அற்ற ஐக்கியம்;

நிற்க; ஏறக்குறைய ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சம் மக்கள் வாழும் இந்நாட்டில் கிட்டத்தட்ட 35இலட்சம் மாணவர்கள் மட்டும் மொழியை மாறிக் கற்றுக்கொள்வதால் ஒற்றுமை ஏற்பட்டுவிடுமா? ஏனைய ஒருகோடி மக்கள் உள்ளத்தில் உள்ள துவேசத்தை எப்படி ஒழிப்பது?

இனி, பாடசாலை நிலையில் எடுத்துக் கொண்டாலும், தாய்மொழியிலேயே போதிய புலமையில்லாத மாணவர்களைத்தான் தற்போது பெரும்பாலும்காணக் கூடியதாயுள்ளது. ஆங்கிலத்தைப் பலவருடங்களாகக் கற்றும் சரியாக விளங்கிக் கொள்ளவோ, எழுதவோ, பேசவோ முடியாத நிலையிலிருக்கும் மாணவர்கள் ஏனைய பாடங்களுக்கிடையில் மற்றுமொரு மொழியறிவைப் பெற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவுடைமையாகாது; அன்றியும் அது அவர்களுக்குப் பெருஞ்சுமையாக இருக்கப் போவதன்றி பெரும்பயனுடையதாகஇருக்கப்போவதில்லை. இன்னும், இந்த மொழிமாற்ற முயற்சியில் ஈடுபடும் மாணவர்களில் எத்தனைபேருக்கு இது ஐக்கியத்துக்காகப் பயன்படப் போகிறது? இவர்கள் இதைப் பிரயோகிக்கும் வாய்ப்பு பலருக்குக் கிடையாது என்பதையும் எடுத்து நோக்கினல் மொத்தத்தில் இத்திட்டம் ஒரு போலி—வீண் சுமை என்பதை உணரமுடியும்.

சிங்களம்ஆட்சிமொழியாகவிருக்க தமிழைக் கற்பதில் சிங்களமாணவர் அக்கறை காட்டமாட்டார்கள். அன்றியும் அவர்களுக்கும் சுமையாக இருக்கும். சிங்கள மாணவர் தமிழைக் கற்க வேண்டிய அவசியம் என்ன? அவர்களே இத்திட்டத்தை எதிர்ப்பார்கள். எதிர்க்க வேண்டும் என்றே விரும்புகிறேம். சிங்களமாணவர் எதிர்க்காமல் இருந்தால் சிங்களத்தை தமிழர் மத்தியில் திணிக்கச் சிங்கள இனம் ஆடும் ஒரு நாடகமென்றே அதைக் கருதவேண்டும்.

சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஒரு வடிவமே இம்மும்மொழித்திட்டம் என்பதை தமிழர் நன்கு உணர்ந்து இதனை வன்மையாக எதிர்க்கவேண்டும் என்றே விரும்புகிறேம்.

---

### தந்தை செல்வா ஞாபகார்த்த தங்கப் பதக்கத்தை பெற்ருர்!

இலங்கை சட்டக் கல்லூரி தமிழ்மன்றம்இராமகிருஷ்ண மண்டபத்தில் 18-2-78இல் நடாத்திய கலைவிழாவில் நடைபெற்ற எழுந்தமான பேச்சுப் போட்டியில் தமிழர் விடுதலைக்கூட்டணி பிரமுகரான திரு. இ. த. விக்னராசா முதலாவது இடத்தை பெற்று அமரர் தந்தை செல்வாவின் ஞாபகார்த்தமாக அன்பளிப்பு செய்யப்பட்ட தங்கப் பதக்கதைப் பெற்ருர். இந்த தங்கப்பதக்கம் சுதந்திரன் நிறுவனத்தால் அன்பளிப்பு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி முன்னுள் முகாமையாளரான இளைப்பாறிய தபால் அதிபர் திரு. இ. தம்பையா ஜே. பி. அவர்களின் புத்திரனுன திரு. இ. த. விக்னராசா சட்டக்கல்லூரி இறுதியாண்டு மாணவனுவார். இவர் கல்லூரி விவாதக்குழுவில் சிரேஷ்ட உறுப்பினராக தொடர்ச்சியாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளதுடன், சட்டக் கல்லூரி இந்து மகாசபை தலைவருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைப்பாளர் 'துண்டு'க்கு அரோகரா

## அமிர் ஆட்சேபம் கைமேற் பலன்!

ஐ. தே. கட்சி அமைப்பாளரின் 'துண்டுடன்'முறை தவறி காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கு அண்மையில் தெரிவுசெய்யப்பட்ட அமய ஊழியர்கள் அனைவரும் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 23.2 78ல் இவர்களை வேலை நீக்கம் செய்வதாக மேற்படி தொழிற்சாலை அதிபர் அறிவித்தல் கொடுத்துள்ளார்.

முறைகேடான விதத்தில் அமய ஊழியர்களை தொழிற்சாலைக்கு நியமிப்பதை ஆட்சேபித்தும், ஒரு திட்டவட்டமான அடிப்படையில் இந்நியமனம் வழங்கப்பட வேண்டுமென்று கோரியும் மேற்படி தொழிற்சாலையின் எட்டுத் தொழிற்சங்கங்களும் ஒன்றுபட்டு 'சட்டப்படி' வேலைசெய்யும் இயக்கத்தைநடத்திவந்ததுதெரிந்ததே.

தொழிற்சங்கங்களின் இந்தக் கோரிக்கையை ஆதரித்தும் அமைப்பாளரின் 'துண்டு'முறை மூலம் அமய ஊழியர்களை தெரிவுசெய்ததை பலமாகக் கண்டித்தும் தேசிய அரசுப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவரும்; காங்கேசன்துறை பா. உ. மான திரு. அ. அமிர்தலிங்கம் ஒத்திவைப்புப்பிரேரணை மீது அண்மையில் காரசாரமாகப்பேசியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து முறைதவறி தெரிவுசெய்யப்பட்ட ஊழியர்கள் அனைவரும்இப்போது வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

தொழிற்சாலை நிர்வாகம் முறையாக இந்த அமய ஊழியர்களை தெரிவுசெய்திருந்தால் இன்று அவர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டிருக்காது. இந்த ஊழியர்களை முறைதவறிதொழிற்சாலை நிர்வாகம் தெரிவுசெய்ததுதான், இன்றுஇந்த ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்படுவதற்கு ஒரே காரணமாகும்.

ஆனால் தாங்கள் செய்த தவற்றினால் ஏற்பட்ட விளைவை தொழிற்சங்கங்களின்மீது போட்டு வேலை இழக்கும் ஊழியர்களுக்கும், தொழிற்சங்கங்களுக்குமிடையே சிண்டுமுடியும் விதத்தில் தொழிற்சாலை நிர்வாகம் தனது வேலைநீக்க அறிவித்தல் கடிதத்தை தயாரித்துள்ளது.

## இருவருக்கு விளக்கமறியல்

"தரப்படுத்தல் நீடிக்க வேண்டும் கோரிக்கைக்கு சமாதான வழிகளில் அரசு இணங்காவிடில் அரசாங்கத்தைப் பலாத்கார வழிகளின் மூலம் முறியடிப்போம்" என்று பேசியதாகக் கூறப்படும் வீடமைப்புத் துறை முன்னாள் செயலாளர் திரு. நாத் அமரக்கோன். சட்டத்தரணி திரு. குலரத்தின ஆகியோர் சி.ஐ.டி.யினரால் கைதுசெய்யப்பட்டு கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, கொழும்பு நீதவானால்மார்ச் 8-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களைத்தவிர மேலும் பலர் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

## பணிஸ் சில்வா . .

—1:ம் பக்கத் தொடர்

ஒத்திவைப்பு பிரேரணைமீது பேசிய முல்லைத்திவு பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு அம்பலப்படுத்தியுள்ளார்.

இது சம்பந்தமாக திரு. தர்மரத்தினம் யாழ் சிறைச்சாலை அதிகாரிக்கு எழுதிய சத்தியக்கடதாசியொன்றை திரு செல்லத்தம்பு தேசிய அரசுப்பேரவையில் சமர்ப்பித்து, தார்மீக ஆட்சியில் இப்படிப்பட்ட கொடுமைகள் இடம் பெறலாமாஎன்று கேட்டார்.

திரு. செல்லத்தம்பு சமர்ப்பித்த கணபதிப்பிள்ளை தர்மரத்தினத்தின் குறித்த சத்தியக்கடதாசி பின்வருமாறு:-

கடந்த பெப்ரவரி 7-ம் திகதி மாலை 4 மணிக்கு 33 ஸ்ரீ 437 என்ற இலக்கத்தையுடைய ஜீப் வண்டியில் யோகபுரத்தில் உள்ள எனது வீட்டுக்கு வந்த மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. ஹெட்டியாராய்ச்சியும் வேறு பொலிசாரும் என்னைக் கைதுசெய்தனர். கைதுசெய்ததுக்கான காரணம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஜீப்பில் ஒட்டாங்குளத்தை சேர்ந்த சம்பந்த சரணாலயம் என்பவரும் இருந்தார். ஜீப் வவுனியா ஊடாக மன்னார் சென்றது.

### கொலை பயமுறுத்தல்

பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரி திரு. ஹெட்டியாராச்சி அடித்துக் கொடுமைப்படுத்தி பணிஸ் சில்வா என்பவரைப்பற்றித் தெரியுமா என்றும் அவரைப் பற்றிக் கூறுவிடில் கொலை செய்துவிடுவதாகவும் பயமுறுத்தினார்.

### கம்பத்தில் தொங்கவிட்டனர்

பின்னர் 8-ம் திகதி பொலிஸ் விடுதிக்கு என்னை அழைத்துச் சென்ற பொலிசார் அங்கே எனது கைகளைப் பின்னால்கட்டி கம்பம் ஒன்றில் தொங்கவிட்டனர். தொங்கிய நிலையில் என்னைப் பலமாக அடித்தனர், உண்மையைச் சொல்லாவிடின் கொலை செய்துவிடுவதாகப் பயமுறுத்தினர்.

### 4 மணித்தியாலம் தொங்கினேன்

4 மணித்தியாளங்களாகத் தொங்கிய எனது உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது அந்நிலையில் என்னைப் பலமாக அடித்தபோது நான் கதறி அழுதேன்.

பின்னர் உதவிப் பொலிஸ் அதிபரின் முன்னிலையில் அழைத்துச் செல்லப்பட்டு அவரும் பல மணி நேரம் என்னை விசாரித்தார்.

### வெரப்பிட்டியா குறுக்கீடு

திரு. செல்லத்தம்பு இந்த சத்தியக்கடதாசியை வாசித்துக் கொண்டிருந்த போது. குறுக்கிட்ட பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. ரி. பி. வெரப்பிட்டியாவும், தோட்டக் கைத்தொழில் அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தனவும் இக்கடதாசியை இங்கு வாசிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறினர்.

உடனே செல்லத்தம்பு அப்படியானால் உங்கள் தார்மீக அரசில் இவ்வாறு தான் நடைபெறும் இது போன்ற செயல்களைத் தொடர்ந்தும் அனுமதிக்கப் போகின்றீர்களா? என்றார்.

அப்போது குறுக்கிட்ட சபாநாயகர், திரு. செல்லத்தம்புவைத் தொடர்ந்து படிக்குமாறு கூறினார்.

திரு. செல்லத்தம்பு தொடர்ந்து வாசித்தார்.

பெப்ரவரி 10-ந் திகதி எனது கைகளைக் கட்டிய பொறுப்பதிகாரி கதிரை ஒன்றில் ஏற்றி ஒரு கம்பத்தில் எனதுகைகளைத்தொங்க விட்டு பின் கதிரையை இழுத்துவிட்டார்,

### 7 மணித் தியாலங்கள் தொங்கினேன்

7 மணித்தியாலங்கள் அப்படியே கயிற்றில் தொங்கினேன். அந்நிலையில் என்னைத் துன்புறுத்தினார்கள்.

பின்னர் என்னை அவிழ்த்துவிட்டபோது மணிக்கட்டில் இரத்தம் கசிந்தது. என்னால் சாப்பிடக்கூட முடியவில்லை.

### நாய்போல சாப்பிடுமாறு பணித்தார் இன்ஸ்பெக்டர்

என்னால் சாப்பிடக்கூட முடியவில்லை. சாப்பாட்டுப் பார்சலை நிலத்தில் வைத்த இன்ஸ்பெக்டர் நாய்போல குனிந்து கவ்விச்சாப்பிடுமாறு பணித்து தலையைக் கீழே அமத்தினார். தண்ணீரையும் கீழே வைத்து நாய் போல் குடிக்குமாறு பணித்தார்,

### தலைமயிரை வெட்டினர்

பின்னர் எனது தலைமயிரைப் பிடித்து இழுத்துச் சென்ற பொறுப்பதிகாரி எனது தலைமயிரை வெட்டுவித்தார்.

எதுவித வைத்திய கண்காணிப்பும் அளிக்கப்படவில்லை.

அதே தினம் எனக்கு பொலிஸ் உடை அணிவித்தார்கள். அந்த உடையைக் கூட என்னால் அணிய முடியவில்லை. மிகவும் சிரமப்பட்டு அந்த உடையைப் போட்டார்கள்.

பின்னர் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு யோகபுரம், ஒட்டங்குளம். பாண்டியன் குளம், வவுனிக்குளம் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் சென்று சிலருடைய வீடுகளைக் காட்டுமாறு வற்புறுத்தினர்.

### 'பொலிஸ் தொப்பி'

என்னை எவரும் அடையாளம் காணமல் இருக்க எனக்கு பொலிஸ் தொப்பி அணியப்பட்டது.

### மாஜிஸ்திரேட் முன் ஆஜர்

அதே தினம் மன்னார் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு பொலிசாரின் வேண்டுகோளின் பேரில் ரிமாண்டில் வைக்கப்பட்டேன்.

பின்னர் 2 நாட்கள் மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு வாக்குமூலம் அளித்தேன். 17ம்திகதி மாலை மன்னார் சிறைச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டேன்.

### யாழ், சிறை

18ம் திகதி யாழ் சிறைச்சாலைக்கு மாற்றபட்டு மாலை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இப்போது எனது கைகால்கள் இயங்காத நிலையில் கஷ்டப்படுகிறேன்,

இக்கடதாசியைப் படித்த திரு. செல்லத்தம்பு யோகபுரம் மன்னார் பொலிஸ் நிலைய எல்லைக்குள் இல்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

### பிரதமர் உறுதி

இதற்குப் பதிலளித்த பிரதமர் திரு. பிரேமதாசா இது போன்ற செயல்கள் தொடர்ந்து அனுமதிக்கப்படமாட்டாது என்றும் இத்தகவலைத் தெரிவித்த எம். பிக்கு நன்றி தெரிவிப்பதுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய வழக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி அளித்தார்,

## மார்ச் 4-ம் திகதி நல்லூர்த் தொகுதி த. இ. பேரவை அமைப்புக் கூட்டம்

தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் மாவை சேனாதிராசா பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்.

தமிழ் இளைஞர் பேரவையின் புதிய அமைப்பு விதியின் படி நல்லூர்த் தொகுதியில் அமைப்பு வேலைகளைச் செய்யுமாறு த. இ. பேரவையின் மத்திய செயற்குழுவின் நல்லூர்த் தொகுதி உறுப்பினரையும் நல்லூர்த்தொகுதி அமைப்பாளரையும் 1977 மார்கழி மாதத்தின் நடுப்பகுதியில் எழுத்துமூலமான அறிவித்தல் மூலம் கேட்டிருந்தோம்.

அதன்படி கிளைகள் அமைத்திருந்தாலோ அல்லது முன்னர் கிளைகளாக அமைக்கப்பட்டிருந்தாலோ அக்கிளைகளைத் த. இ. பேரவையின் தலைமை அலுவலகத்திற்கு அறிவித்து அதனைப் பதிவு செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருக்கவில்லை.

இதனால் 1978 பெப்ரவரி 8ம் திகதி நல்லூர்த் தொகுதியின் முக்கிய பன்னிரண்டு உறுப்பினர்கள் கூடி நல்லூர்த்தொகுதி அமைப்பு வேலைகள் பற்றி ஆராய்ந்தனர்.

பின்னர் 19-2-78 மாலை 4 மணியளவில் பொதுவாக அமைப்புவேலைகளைச்செய்து நானும் நல்லூர்த் தொகுதி அமைப்பாளர் திரு. க. பரமசாமி அவர்களின்இல்லத்தில் நடைபெற்ற அமைப்புவேலையின் ஆரம்பக் கட்டத்தில் ஐவர் கொண்ட அமைப்புக் குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அக்குழுவினர், நல்லூர்த் தொகுதியில் ஏற்கனவே கிளைகள் அமைந்திருந்தால் அவர்களுடனும் கிளைகள் அமையாதவிடத்து முக்கிய உறுப்பினர்களையும் தொடர்பு கொண்டு 1978ம் ஆண்டு மார்ச் மாதம் நான்காம் திகதி நல்லூர்த்தொகுதியில் த.இ.பேரவை அமைப்புக் கூடடத்தை நடாத்துவார்கள். இடமும், நேரமும், அழைப்பு மடலிற் குறிக்கப்படும்.

ஆகவே நல்லூர்த் தொகுதியில் த. இ. பேரவையின் கிளைகளாக அமைத்து இயங்குபவர்களும், அமைப்பில் சேர்ந்து இயங்க விரும்புபவர்களும் நல்லூர்த்தொகுதியின் த. இ. பேரவை அமைப்புக்குழுவுடன் தொடர்பு கொண்டு த. இ. பேரவை அமைப்புக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1978 மார்ச் 4ம்திகதி நல்லூர்த் தொகுதியில் நடைபெறும் த. இ. பேரவை அமைப்புக்கூட்டத்திற்குத் த.வி.கூட்டணியின் செயலதிபர்களானதிருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

எனவே எமது இ.பேரவை அமைப்பை ஏற்படுத்த இளைஞர்களும் மாணவர்களும் ஒத்துழைப்பும், உதவியுந்தர வேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நல்லூர்த்தொகுதித் த.இ. பேரவை அமைப்புக்குழுவில் திருவாளர்கள் க. பரமசாமி, க. சண்முகராசா, சு சபாரத்தினம் (சிறீ), ப. திருநீலகண்டன், தா. தியாகமூர்த்தி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

**ஒலிவ் ஸ்நானப் பவுடர்**

எண்ணெய் முழுக்குச் சிறந்த ஒலிவ் ஸ்நானப் பவுடரை வாங்கி உபயோகியுங்கள். தலைமயிரிலுள்ள அழுக்கு, சொடுகு, பேன் ஆகியவற்றை அறவே நீக்குகிறது.

—ஓர் மில்க்வைற் தயாரிப்பு

இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் திகதி புதன் கிழமை அச்சிட்டுவெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org